கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 14/2022**

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 8 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனிமொழி | வயது | 51 |
| தந்தை பெயர் | ஜெயபால் | ஜாதி | |
| தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர், AWPS, Thiruvarur. | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

( 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 1 மற்றும் 5 எதிரிகள் சார்பில் குவிமுச 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலைத்தில் பணிபுரிந்த ஆய்வாளராக பணிபுரிந்த கனிமொழி என்பவரின் கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். ஆய்வாளர் கனிமொழி கடந்த 18.05.2022 ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது வடபாதிமங்கலம் புனவாசலை சேர்ந்த ராதா என்பவரின் மகள் ஆனந்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த நிலைய மனு எண். 108/2022 கொடுத்து விசாரணைக்கு பின்பு 18.05.2022 ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண். 11/2022 இதச பிரிவுகள் 498(A), 294(b), 323, 506(1), 420 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது)** **பின்னர்** அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரகு, ஐயப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **( பார்வை மகசர் அ.சா.ஆ. 6 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது.) பின்னர்** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடி வந்த

நிலையில் வழக்கின் 1 வது எதிரியை கடந்த 18.05.2022 ம் தேதி 15.45 மணிக்கு கீழ மணலி காரநாதன் கோவில் அருகே எதிரியின் வீட்டில் இருந்தவரை காரணம் கூறி கைது செய்தும் அப்போது தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜேஷ் மற்றும் மங்கையர்கரசி ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து எதிரியை நிலையம் கொண்டு வந்து உரிய நடைமுறைக்கு பிறகு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கின் மற்ற எதிரிகளான 2 முதல் 5 எதிரிகளை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் பிணையில் சென்ற விபரத்தை தெரிந்து கொண்டுள்ளார். சாட்சிகள் ராஜேஷ் மற்றும் மங்கையர்கரசியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து எதிரிகள் அசா.1 க்கு கருக்கலைப்பு செய்த விபரம் தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவினை 498(A), 294(b), 323, 506(1), 420 இதச ல் இருந்து சட்டப்பிரிவுகள் 498(A), 294(b), 323, 506(1), 420, 312 இதச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து'ள்ளார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ-8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இத்துடன் அவரது புலன் விசாரணையினை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 498(A), 294(b), 323, 506(1), 420, 312 இதச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை 26.06.2022 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு தொடர்பாக எங்கள் காவல் நிலையத்தில் 2 புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 23.03.2022 ம் தேதி கொடுக்கப்பட்ட புகாருக்கு மனு ரசீது மட்டும் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 18.05.2022 ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். திருமணம் நடந்த தேதியில் இருந்து 7 மாதங்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காலதாமத்திற்கான விளக்கம் புகார்தாரர் புகாரிலோ, போலீஸ் விசாரணையிலோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 23.03.2022 ம் தேதி 1 வது எதிரியுடன் சேர்ந்து வாழ வேண்டி தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் தொடர்பாக எங்கள் காவல் நிலையத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த ஆவணங்கள் அடிப்படையில் இரண்டாவதாக கொடுக்க ப்பட்ட புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரல் திருமணத்திற்கு ஆதரமாக திருமண புகைப்படம் , வீடியோ, திருமண

பத்திரிக்கை கோவில் ரசீது போன்றவை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் மருத்துவமனையில் சிகிசசை எடுத்து க்கொண்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால் சரிதான். திருமணத்தில் கலந்து கொண்டர்வர்களின் சாட்சியம் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் கருகலைப்பு செய்ததற்கான மருத்துவ ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதல் புகாரில் கூறியுள்ள சங்கதிகளுக்கு வேறுபாடாக இரண்டாவது புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் புகாரின் மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இரண்டாவது புகார் திரித்து கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசியல் அழுத்ததினால் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும், 1 வது எதிரி புகார்தாரரை திருமணம் செய்யவில்லை எதிரி வீட்டிற்கு புகார்தாரர் செல்லவும் இல்லை. 1 வது எதிரி அவரை எவ்வித கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மற்ற எதிரிகள் புகார்தாரரை அடித்து தரத்தியதாக கூறப்படுவது பொய் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இருந்த முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1வது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.